செ.வெ.எண்.231 நாள்.09.04.2018.

திருநெல்வேலி மாவட்ட ஒருங்கிணைந்த நீதி மன்ற வளாகத்தில் சமரச மையத்தின் 13வது ஆண்டு தினத்தினை முன்னிட்டு, அறிவிப்பு பலகை மற்றும் டிஜிட்டல் தகவல் பலகையினை மாவட்ட முதன்மை நீதியரசர் திரு.ராஜசேகர் அவர்கள் திறந்து வைத்தார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஒருங்கிணைந்த நீதி மன்ற வளாகத்தில் சமரச மையத்தின் 13வது ஆண்டு தினத்தினை முன்னிட்டு, அறிவிப்பு பலகை மற்றும் டிஜிட்டல் தகவல் பலகை திறப்பு விழா இன்று (09.04.2018) நடைபெற்றது. விழாவில் மாவட்ட முதன்மை நீதியரசர் திரு.ராஜசேகர் அவர்கள் சமரச மையத்தில் அறிவிப்பு பலகை மற்றும் டிஜிட்டல் தகவல் பலகையினை திறந்து வைத்தார்.

பின்னர், மாவட்ட முதன்மை நீதியரசர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில், சமசர மையம் தொடங்கப்பட்டு, 13 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. சமரச நாள் அன்று அனைத்து துறை அலுவலர்களையும் அழைத்து விழிப்புணர்வினை ஏற்படுத்திட உயர்நீதி மன்ற நீதியரசர் உத்தரவிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து, இன்று (09.04.2018) திருநெல்வேலி மாவட்ட ஒருங்கிணைந்த நீதி மன்ற வளாகத்தில் உள்ள சமரச தீர்வு மையம் 13 ஆண்டுகள் வெற்றிகரமாக நடைபெற்று வருவதை முன்னிட்டு, சமரச தினத்தில் அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. சமரச வளாகத்தில் அறிவிப்பு பலகை மற்றும் தகவல் பலகை பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் நிறுவப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் 140 மேற்பட்ட வழக்குகள் சமரச நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டு, வழக்கு சம்மந்தப்பட் தரப்பினர்கள் தங்களுடைய முரண்பாடுகளை நேரிடையாக சமரசர் முன்னிலையில் பேசி சுமுகமான தீர்வுகள் காண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு தீர்வு காணப்பட்ட பின்பு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என மாவட்ட முதன்மை நீதியரசர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.அருண்சக்திகுமார்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், இரண்டாவது மாவட்ட கூடுதல் நீதிபதி திருமதி.சந்திரா, மூன்றாம் மாவட்ட கூடுதல் நீதிபதி திரு.ஜெயராஜ், நான்காம் மாவட்ட கூடுதல் நீதிபதி திரு.தாகூர், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, திருநெல்வேலி அரசு வழக்கறிஞர் திரு.சிவலிங்கமுத்து, மற்றும் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், பொதுமக்கள், அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.